(Puducherry Region: Handicrafts Training - Size 20cm x 15cm)

**Advt. No: 1**

**புதுச்சேரி அரசு**
**மாவட்டத் தொழில் மையம்**
**தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 9**

**புதுச்சேரி, நாள்:**

## அறிக்கை

**2020-2021 ஆம் ஆண்டிற்கான கைவினைத் தொழில் பயிற்சி பெறுவது மற்றும் அளிப்பது தொடர்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

புதுச்சேரி அரசு மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 2020-2021 ஆம் ஆண்டுக்கான கைவினைத் தொழில் பயிற்சி பெறுவதற்கு மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கீழ்க்கண்ட தகுதியுடைய ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கைவினைப் பயிற்சிகளின் விவரம்:**

1. காகிதக் கூழ் பொம்மைகள் மற்றும் கலைப்பொருட்கள் செய்தல்
2. சுடுகளிமண் பொம்மைகள் செய்தல்
3. அப்ளிக் மற்றும் பூ வேலைப்பாடுகள் செய்தல்
4. துணியினால் ஆன பொம்மைகள் செய்தல்
5. பனைஓலை கலைப்பொருட்கள் செய்தல்
6. கல்லில் சிற்பங்கள் வடித்தல்
7. நெட்டியில் கலைப் பொருட்கள் செய்தல்
8. தேங்காய் ஓட்டில் கலைப் பொருட்கள் செய்தல்
9. பதப்படுத்தப்பட்ட இலைகள் மற்றும் பூவினால் ஆன கலைப்பொருட்கள் செய்தல்
10. மரத்தினாலான கலைநயம் மற்றும் படிப்பினைமிக்க பொம்மைகள் செய்தல்.
11. சித்திரக்கலை பாய் முடைதல்
12. தோல் கைவினைப் பொருட்கள் செய்தல்
13. குரொஷேட் பின்னல் வேலைப்பாடுகள்
14. பிரம்பில் ஆன கலை பொருள்கள் செய்தல்
15. கலைநயமிக்க வாசனை மெழுகுவர்த்தி செய்தல்
16. பீங்கானில் கலைப்பொருட்கள் செய்தல்
17. நூலினால் பின்னப்பட்ட தூளிகள் செய்தல்

**பயிற்சி காலம்:**

கைவினைத் தொழில் பயிற்சி – ஆறு (6) மாதங்கள்

<u>தகுதிகள் : (பயிற்சி பெறுபவர்)</u>

- விண்ணப்பதாரர் புதுச்சேரியில் பிறந்தவராகவோ அல்லது குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகள் புதுச்சேரியில் தொடர்ந்து வசிப்பவராகவோ இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் எழுத படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
- மத்திய/மாநில அரசின் கீழ் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.

(தகுதிகளுக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

<u>கைவினைக் கலைஞர்களுக்கான தகுதிகள் (பயிற்சி அளிப்பவர்)</u>

- மேற்படி தொழிலில் பயிற்றுநர்கள்/ பயிற்சி நிறுவனங்கள் குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்களுக்கு தொடர்ந்து தொழில் நடத்தி வருபவர்களாகவும், குறிப்பிட்ட கலையில் சிறந்த அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும், மத்திய மாநில அரசுகளின் மூலம் அளித்த பயிற்சிக்காலம் இதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.
- புதுச்சேரி பிராந்தியத்தை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- மத்திய (அ) மாநில அரசுகளால் விருது பெற்றவர்கள் (National and State Awardees) (அ) நற்சான்றிதழ் (Merit Certificate) பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பயிற்றுநர்களின் வயது வரம்பு குறைந்தது 25 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கைவினை <u>கலை</u>க்கான உரிய தொழில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

(தகுதிகளுக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

<u>குறிப்பு :</u> பயிற்சிக்கான விண்ணப்பத்தை edistrict.py.gov.in என்ற இணையதளத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி **09.12.2020.**

மேலும் விபரங்களுக்கு / தொடர்புக்கு
தொலைபேசி : 0413 – 2248391/2249392
dic.puducherry.gov.in

**(நா.அன்பழகன்)**
பொது மேலாளர்
மாவட்டத் தொழில் மையம்
புதுச்சேரி.

(Puducherry Region: Coir Training – Size 20cm x 15cm)

**Advt. No: 2**

**புதுச்சேரி அரசு**
**மாவட்டத் தொழில் மையம்**
**தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 9**

**புதுச்சேரி, நாள்**

**<u>அறிக்கை</u>**

**<u>2020-2021 ஆம் ஆண்டில் தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரிக்கும் தொழிலில் பயிற்சி பெறுவது / அளிப்பது தொடர்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.</u>**

புதுச்சேரி அரசு மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 2020-2021 ஆம் ஆண்டில் புதுச்சேரி பகுதியில் தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரிக்கும் தொழிலில் பயிற்சி பெறுவதற்கு மற்றும் பயிற்சி அளிப்பதற்கு தகுதியுடைய ஆண் / பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

<u>பயிற்சியின் விவரம்</u>

தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரித்தல்

**<u>பயிற்சி காலம்:</u>**

தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரித்தல் - ஆறு(6) மாதங்கள்

**<u>தகுதிகள்:</u> (பயிற்சி பெறுபவர்)**

- விண்ணப்பதாரர் புதுச்சேரியில் பிறந்தவராகவோ அல்லது குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் புதுச்சேரியில் தொடர்ந்து வசிப்பவராகவோ இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்
- குறைந்தபட்சம் எழுத படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும்.
- மத்திய / மாநில அரசின் கீழ் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.

(தகுதிகளுக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

**தகுதிகள்: (பயிற்சி அளிப்பவர்)**

மேற்படி தொழிலில் பயிற்றுநர்கள் / தொழில் நிறுவனங்கள் குறைந்தபட்சம் 3 வருடங்களுக்கு தொடர்ந்து தொழில் நடத்தி வருபவர்களாகவும், சிறந்த அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். மத்திய மாநில அரசுகளின் மூலம் அளித்த பயிற்சிக்காலம் இதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

- புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- பயிற்றுநர்களின் வயது வரம்பு குறைந்தது 25 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.
- தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரித்தலுக்கான உரிய தொழில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

(தகுதிக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படவேண்டும்)

குறிப்பு : பயிற்சிக்கான விண்ணப்பத்தை edistrict.py.gov.in என்ற இணையதளத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி **10.12.2020.**

மேலும் விபரங்களுக்கு / தொடர்புக்கு
தொலைபேசி : 0413 – 2248391/2249392
dic.puducherry.gov.in

**(நா. அன்பழகன்)**
பொது மேலாளர்
மாவட்டத் தொழில் மையம்,
புதுச்சேரி.